# மாகாணக் கல்வித்திணைக்களம்
# கல்விஅபிவிருத்திக்கும்தேர்வுக்குமான சபை
# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018
# கர்நாடகசங்கீதம்

**தரம் - 11** **நேரம் -3 மணித்தியாலங்கள்**

## பகுதி 1

கவனிக்க வேண்டியவை

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிக.

1. நாட்டிய நிகழ்ச்சிகளிலும் இசைக்கச்சேரிகளிலும் இடம்பெறும் சபாகான உருப்படி.
   1. ஸ்வரஜதி 2. பதம் 3. ஜதீஸ்வரம் 4. தான வர்ணம்
2. 15 வது மேளகர்த்தா இராகத்தின் ரிஷபம், நிஷாதம் முறையே,
   1. சுத்த ரிஷபம், காகலி நிஷாதம் 2. சுத்த ரிஷபம், கைசிகி நிஷாதம்
   3. சதுஸ்ருதி ரிஷபம், கைசிகி நிஷாதம் 4. சதுஸ்ருதி ரிஷபம், காகலி நிஷாதம்
3. அப்பியாசகான வகையைச் சேர்ந்த உருப்படி வகைகள்
   1. அலங்காரம், க்ருதி 2. ஜண்டைவரிசை, கீர்த்தனை
   3. கீதம், அலங்காரம் 4. ஜண்டைவரிசை, பதம்
4. இசைக்கச்சேரிகளின் இறுதியில் தோஷ நிவாரணியாகப் பாடப்படும் இராகம்
   1. தோடி 2. ஹரிகாம்போதி 3. மத்தியமாவதி 4. கல்யாணி
5. “உற்றுமை சேர்வது…”எனத்தொடங்கும் தேவாரம் அமைந்த பண்.
   1. நட்டராகம் 2. நட்டபாடை 3. பஞ்சமம் 4. பழம்பஞ்சுரம்
6. உபாங்க இராகமாக அமையாத இராகம்
   1. மோகனம் 2. பிலஹரி 3. மத்தியமாவதி 4. ஹம்சத்வனி
7. தந்தி வாத்தியத்தில் சிறந்த வாத்தியம்
   1. வீணை 2. தவில் 3. நாதஸ்வரம் 4. கடம்
8. தேவாரங்களைப் பண்ணோடு பாடப் பேராதரவு வழங்கிய மன்னன்
   1. இராஜராஜசோழன் 2. இராஜேந்திரசோழன் 3. நின்றசீர்நெடுமாறன் 4. மகேந்திரவர்மன்
9. சாம கானம் பாடப்படும் இராகம்
   1. பந்துவராளி 2. ஹரிகாம்போதி 3. ஹரஹரப்ரியா 4. மத்தியமாவதி
10. முத்துத்தாண்டவர் பாடிய முதற் பாடல்

1. “காணாமல் வீணிலே…” 2. “பூலோககைலாசகிரி…”
3. “தரிசனம் செய்வேனே…” 4. “அருமருந்தொருதனிமருந்து…”

11. ஏகத்வனி வாத்தியமாகவும் நிஷ்கள வாத்தியமாகவும் அமைவது
   1. புல்லாங்குழல் 2. பிடில் 3. நாதஸ்வரம் 4. மிருதங்கம்

12. பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருந்தும் இராகம்
   ருத்ர சக்கரத்தில் 5 வதாக இடம் பெறும் இராகம்
   ஹங்கேரி நாட்டு இசையில் இடம் பெறும் இராகம்
   1. காந்தாமணி 2. புந்துவராளி 3. தோடி 4. கல்யாணி

13. பத வர்ணத்தில் சாகித்தியம் அமைந்திருக்கும் அங்கங்கள்
   1. பல்லவி, அனுபல்லவி, சரணம் 2. பல்லவி, அனுபல்லவி
   3. எல்லா அங்கங்களுக்கும் 4.பல்லவி, அனுபல்லவி, சரணம், சரணஸ்வரங்கள்

14. பிலஹரி இராகம் அமைவது.
   1. ஷாடவ சம்பூர்ணம் 2. ஔடவ சம்பூர்ணம்
   3. ஔடவ ஷாடவம் 4. சம்பூர்ண ஔடவம்

15. கி.பி. 7ஆம் 8ஆம் நூற்றாண்டுகளில் நாயன்மார்களால் பாடப்பட்ட தேவாரப் பதிகங்களை மக்களிடையே பரப்பிய மன்னர்.
   1. பல்லவ மன்னர் 2. சோழ மன்னர்
   3. சேர மன்னர் 4. நாயக்க மன்னர்

16. ஹரிபாலர் என்பவரால் எழுதப்பட்ட நூல்
   1. சங்கீத சாராம்ருதம் 2. சதுர்தண்டிப் பிரகாசிகை
   3. சங்கிரக சூடாமணி 4. சங்கீத ஸுதாரகம்

17. நீ;தபமா;காரீஸா எனும் ஸ்வரக் கோர்வையின் மாத்திரைகள்
   1. 2 2. 3 3. 6 4. 8

18. பஜனைப் பத்ததியின் தந்தை எனப் போற்றப்படுபவர்
   1. முத்துத்தாண்டவர் 2. தாளப்பாக்கம் அன்னமாச்சாரியார்
   3. தாளப்பாக்கம் சின்னையா 4. புரந்தரதாஸர்

19. “முருகாஎனதாருயிரே…”என்ற வர்ணத்தை இயற்றியவர்
   1. பாபநாசம் சிவன் 2. பெரியசாமிதூரன்
   3. மதுரைமுரளீதரன் 4. K. டைகர் வரதாச்சாரியார்

20. கண்டஜாதி அட தாளத்தின் அட்சரங்களுக்குச் சமமான தாளம்
   1. மிஸ்ரஜாதி திரிபுடைதாளம் 2. சதுஸ்ரஜாதி அடதாளம்
   3. திஸ்ரஜாதி துருவதாளம் 4. சதுஸ்ரஜாதி துருவதாளம்

21. விடியற் காலையில் இசைக்கப்படும் இராகம்

1. பூபாளம் 2. ஆனந்தபைரவி 3. நீலாம்பரி 4. மத்தியமாவதி

22. தமிழ்ப் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளுள் ஒன்றாகக் கருதப்படுவது.

1. பூலோககைலாசகிரி 2. பிறவாதவரம் தாரும்
3. சுந்தரேஸ்வருணி 4. ஸ்ரீ நாதாதிகுருகுஹோ

23. $I_5$ / 0 / $I_5$ / $I_5$ //

ஸமாகரி / கம / ஸரிகரீ / ஸரிகமா //

மேலே தரப்பட்ட ஆவர்த்தனத்துக்கு அடுத்ததாக வரும் ஆவர்த்தனம்

1. ரிமாபக / மப / ரிமகமா / ரிகமபா //
2. ரிபாமக / பம / ரிகமகா / ரிகமபா //
3. ரிபாமக / மப / ரிகமகா / ரிகமபா //
4. ரிபாமக / மப / ரிமகமா / ரிகமபா //

24. சுத்தசாவேரி இராகத்தின் வர்ஜ ஸ்வரங்கள்

1. காந்தாரம்,நிஷாதம் 2. ரிஷபம்,நிஷாதம்
3. காந்தாரம்,தைவதம் 4. ரிஷபம்,காந்தாரம்

25. "மாயன் குழலிசையில் ..."என்ற பதத்தினை இயற்றியவர்

1. முத்துத்தாண்டவர் 2. ஊத்துக்காடு வெங்கடஸுப்பையர்
3. பாபநாசம் சிவன் 4. மதுரை முரளீதரன்

26. "பண்ணும் பதமேழும் ..." என்ற தேவாரத்தை அருளியவர்

1. சுந்தரமூர்த்திநாயனார் 2. திருஞானசம்பந்தர்
3. மாணிக்கவாசகர் 4. திருநாவுக்கரசர்

27. ஸ ர கு மி ப த நு என்ற சங்கேதாட்சரங்களைக் குறிக்கும் இராகத்தின் மேள எண்

1. 8 2. 65 3. 51 4. 22

28. 43 – 48 வரையுள்ள இராகங்கள் அமைந்த சக்கரம்.

1. வஸு 2. ப்ரஹ்ம 3. ரிஷி 4. ருது

29. கண்ட ஜம்பை தாளத்தின் அட்சரங்கள்.

1. 9 2. 8 3. 5 4. 6

30. விவாதி மேளங்கள்.

1. 36 2. 38 3. 32 4. 40

31. நாரதரால் சங்கீதக் கிரந்தத்தைப் பெற்ற வாக்கேயகாரர்

1. சியாமாசாஸ்திரிகள்  2. புரந்தரதாஸர்
3. முத்துஸ்வாமிதீக்ஷிதர்  4. தியாகராஜர்

32. பின்வருவனவற்றுள் இரட்டைப் பெயர்களுடன் விளங்கும் ஸ்தானங்கள்

1. பிரதிமத்திமம், சட்சுருதிதைவதம்  2. சுத்தமத்திமம், சதுஸ்ருதிதைவதம்
3. சுத்தமத்திமம், சட்சுருதிதைவதம்  4. சதுஸ்ருதிரிஷபம், சாதாரணகாந்தாரம்

33. தியாகராஜ சுவாமிகள் வாழ்ந்த காலம்.

1. 1767 – 1847  2. 1762 – 1827  3. 1810 – 1896  4. 1776 – 1835

34. வடமொழியில் "கேயநாடகம்" எனஅழைக்கப்படுவது

1. நாட்டியநாடகம்  2. இசைநாடகம்  3. இலக்கியநாடகம்  4. இதிகாசநாடகம்

35. சாபுதாளத்தின் வகைகள்

1. 3  2. 4  3. 5  4. 6

36. "மானினேர் விழி..."என்ற தேவாரம் அமைந்த பண்ணுக்குரிய இராகம்

1. நாதநாமக்கிரியா  2. காம்போதி  3. பைரவி  4. நவரோஜ்

37. வைதீக கானத்தைச் சேர்ந்த உருப்படி

1. வர்ணம்  2. பதம்  3. கீர்த்தனை  4. கீதம்

38. மிருதங்கத்தின் வலந்தலை, இடந்தலையில் காணப்படும் கண்கள்.

1. 12  2. 14  3. 15  4. 16

39. ஓர் இராகமாலிகையில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த இராகங்கள்

1. 3  2. 4  3. 5  4. 6

40. - ஸரபந்தன தாளத்தில் பல்லவி பாடியவர்
- கதலி ரஸத்துக்கு ஒப்பான உருப்படிகளை இயற்றியவர்
- இவர் இயற்றிய நவரத்தினமாலிகை பிரசித்தமானது

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமானவர்

1. சியாமாசாஸ்திரிகள்  2. முத்துஸ்வாமிதீக்ஷிதர்
3. அருணாசலக் கவிராயர்  4. பொப்பிலிகேசய்யர்

4. (40 X1 =40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடைஎழுதுக.**

1. பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக

   i. சங்கீர்ண என்ற தாள வகையைக் கண்டு பிடித்தவர் யார்?
   ii. வீணை வாசிப்பதில் பிரபல்யமடைந்த வித்துவான் ஒருவரின் பெயர்?
   iii. செந்துருத்திப் பண்ணில் தேவாரப் பதிகம் பாடிய நாயனார்?
   iv. தாளத்தின் ஆறு அங்கங்களுள் ஒன்றான புலுதத்தின் மொத்த அட்சரம்?
   v. தியாகராஜ சுவாமிகளால் இயற்றப்பட்ட இசை நாடகங்களுக்கு 2 உதாரணங்கள் தருக
   vi. ஆதி தாள வர்ணத்தில் ஓர் ஆவர்த்தனத்துக்கு எடுத்துக் கொள்ளும் மொத்த அட்சரம்?
   vii. “அள்ளி உண்டிடலாம் …”என்ற கீர்த்தனை அமைந்த இராகத்தின் ஹிந்துஸ்தான் பெயர்?
   viii. ஹிந்துஸ்தானி இசையில் ‘காமாஜ்தாட்’ என அழைக்கப்படும் இராகத்தின் கர்நாடக இசை இராகம் எது?
   ix. தமிழிசையில் மிருதங்கத்துக்கு வழங்கும் பெயர்கள் இரண்டு தருக?
   x. “சின்னஞ்சிறுகிளியே…”என்ற இராகமாலிகையில் மூன்றாவதாக அமையும் இராகம்?

[1+1+1+1+2+1+1+1+2+1 = 12 புள்ளிகள்]

2. பின்வரும் இராகங்களுள் விரும்பிய ஓர் இராகத்தின் இலட்சணத்தை விரிவாகத் தருக (உருப்படிகள்,சஞ்சாரங்கள் உட்பட)

   i. ஹரஹரப்பிரியா
   ii. ஹரிகாம்போதி
   iii. கல்யாணி

[12 புள்ளிகள்]

3. பின்வருவனவற்றுள் விரும்பிய ஒன்றைப் பற்றிவிரிவான விளக்கம் தருக.
(தெரிவு செய்தவிடயத்துக்கேற்ப இயற்றியவர் பெயரையும் உதாரணங்களையும் குறிப்பிடுதல் வேண்டும்)

   i. பதம்
   ii. சாபுதாளம்
   iii. 35 தாளவிளக்கம் (அட்டவணை உட்பட)

[2 புள்ளிகள்]

4.

i. பாலஸ்வாமிதீக்ஷிதரால் கர்நாடக இசைக்குஅறிமுகமாகியவாத்தியம் எது?

ii. இவ்வாத்தியத்தின் படம் வரைந்துபாகங்கள் குறிக்குக

iii. இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிட்டு இவ்வாத்தியத்தைவாசிப்பதில் தேர்ச்சிபெற்ற இசைக்கலைஞர்களைக் குறிப்பிடுக

[1+6+5 = 12 புள்ளிகள்]

5. முத்துஸ்வாமிதீக்ஷிதரின் வாழ்க்கைவரலாற்றையும் இசைப்பணியையும் பின்வரும் விடயங்களில் ஆராய்க.

i. வாழ்க்கைக் காலம்

ii. பெற்றோர் பெயர்

iii. இசைப் பயிற்சிகள்

iv. வாழ்க்கைச் சம்பவங்கள்

v. இசைப் பணிகள்

vi. இயற்றியஉருப்படிகள்

[1+1+2+2+4+2 = 12புள்ளிகள்]

6.

i. கோவிந்தாச்சாரியாரால் எழுதப்பட்டநூல் எது?

ii. 12 சக்கரங்களையும் இராக சங்கேதங்களையும் குறிப்பிடுக

iii. 3வது மேளச் சக்கரத்தைக்குறிப்பிட்டுஅதனுள் அடங்கும் இராகங்கள் ஸ்வரஸ்தானங்கள்,மேளஎண் என்பவற்றைக் குறிப்பிடுக?

[2+4+6 = 12 புள்ளிகள்]

7. $I_4$ / 0 / $I_4$ / $I_4$ //

ரிகமப / மக / ரிகமக / ரிகமப //

i. மேல்வரும் அலங்காரத்தின் முதல் வரியைத் தருக?

ii. இவ் அலங்காரத்தை இராக,தாள,அங்கஅடையாளங்களுடன் பூர்த்திசெய்க?

[2+10 = 12 புள்ளிகள்]